பக்கங்கள்: 10 விலை : 20/-

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 13 வெள்ளிக்கிழமை 27.03.2020 | கதிர் 10

# மருந்தகங்கள், கடைகளை உடனடியாக மூட உத்தரவு!

## பொலிஸ்மா அதிபர் அவசர அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
அரச ஒசுசல தவிர்ந்த அனைத்து மருந்தகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளை (சுப்பர் மார்க்கட்) உடனடியாக மூடுமாறு பதில் பொலிஸ்மா அதிபர் பொலிஸாருக்கு இன்று பிற்பகலில் அவசர பணிப்புரை விடுத்தார்.
இதனை அடுத்து நாடு முழுவதும் நேற்று திறக்கப்பட்டிருந்த மருந்தகங்கள், சுப்பர் மார்க்கெட்டுகள் அனைத்தும் மூடப்பட்டன. உடனடியாக நடவடிக்கையில் இறங்கிய 9

# புதன்கிழமை முதல் யாழில் கொரோனா பரிசோதனை!

## யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி அறிவிப்பு

விசேட செய்தி



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 27
கொரோனோ தொற்றுப் பரிசோதனை இதுவரை அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் - எதிர்வரும் புதன்கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் இந்தப் பரிசோதனையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். 9

# இதுதான் இலங்கை நீதியா?

## கேட்கிறார் மங்கள



கொழும்பு, மார்ச் 27
உலகின் ஏனைய நாடுகள் குற்றமிழைத்த இராணுவ வீரர்களுக்கு தண்டனை வழங்கி இராணுவத்தினரின் நன்மதிப்பைப் 9

# பிரிட்டன் பிரதமரையும் தாக்கியது கொரோனா!



பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளார்.
கொரோனா வைரஸ் நாடு முழுவதும் பரவியுள்ளதையடுத்து, 9

# பொதுமக்கள் யாரும் வீதிக்கு இறங்காதீர்!

## பொலிஸார் அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச் 27
பொலிஸ் ஊரடங்குச் சட்டத்துக்குக் கட்டுப் பட்டுப் பொதுமக்களை வீடுகளில் இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.
நாடு முழுவதும் 9

# எரிமலை மீதே எமது பயணம்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 27
எரிமைலை ஒன்றின் மீது பயணிப்பது போன்றே இப்போதைய சூழ்நிலை அமைந்துள்ளது எனவும் எப்போது வெடித்து 9

# 4 வயதுப் பாலகிக்கு கிருமி தொற்றில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட 4 வயதுப் பாலகிக்கு கோரோனா தொற்று இல்லை என்பது பரிசோதனையில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.
அவரது குருதி மாதிரிகள் 9

# கிளினிக் நோயாளர்களுக்கு மருந்துகள் வீட்டுக்கே வரும்

## வைத்தியசாலைக்கு தொலைபேசியில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 27
சுகாதார அமைச்சு சகல கிளினிக் நோயளர்களுக்குமான மாதாந்திர மருந்துகளை வீடுகளிற்கே விநியோகிக்க முடிவு செய்துள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார 9

# இலங்கைக்குள் நீதியை நாடுவது முட்டாள்தனம்

## சிவாஜிலிங்கம் சீற்றம்



இலங்கைக்குள் இனிமேல் நீதியை எதிர்பார்ப்பதில் பயனில்லை என்பதையே ஜனாதிபதியின் செயற்பாடு 9

# திறைசேரியில் போதுமான நிதி

கொழும்பு,மார்ச்27
நாட்டின் தற்போதைய நிலைமையில் அரசின் செலவுகளுக்கு போதுமான நிதி கையிருப்பில் உள்ளதாக திறைசேரி தெரிவித்துள்ளது. 9

# ஊரடங்கைப் பொலிஸ், இராணுவம் கடுமையாக நடைமுறைப்படுத்தும்

## மக்களை வீடுகளில் இருக்கக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27
தற்போது நாட்டில் நடைமுறையில் இருக்கும் ஊரடங்குச் சட்டத்தை முழுமையாக பின்பற்றுமாறு அரசு மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.
மிகவும் பாரதூரமான சுகாதாரப் 9

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஜனாதிபதி தொடர்பாடல் பிரிவு 24 மணி நேரமும் திறந்திருக்கும்

### மக்கள் முறைப்பாடுகளுக்காக

கொழும்பு, மார்ச் 27

மக்கள் முறைப்பாடுகளுக்காக ஜனாதிபதி அலுவலகத்தின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு 24 மணி நேரமும் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு மக்கள் முறைப்பாடுகளை பொறுப்பேற்பதற்காக ஜனாதிபதி அலுவலகத்தின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவை 24 மணி நேரமும் திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசு வழங்கும் உத்தரவுகளை நடைமுறைப்படுத்தாதிருத்தல் அல்லது மக்கள் அசௌகரியத்திற்குள்ளாகும் வகையில் செயற்படுதல் குறித்த முறைப்பாடுகளை011-4354550/0114354655 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தெரியப்படுத்த முடியும்.

இந்தத் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தொடர்பு கொள்ள முடியாது போனால் அலுவலகத்தின் நேரடி தொலைபேசி இலக்கமான 0112354354 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு 3872/ 3873/ 3874/ 3875 என்ற தொடர் இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

மக்கள் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் கபில குணசிங்கவின் (0773743718) என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்.

கோரோனா வைரஸ் பரவலுடன் தொடர்பான விடயங்களை தெரியப்படுத்துவதற்காக 0112860003/0112860004 என்ற இலக்கங்களை தொடர்புகொள்ள முடியும்.

0112354354 என்ற இலக்கத்தை தொடர்புகொண்டு 3355 என்ற தொடர் இலக்கத்தின் ஊடாகவும் இந்த தகவல்களை தெரிவிக்க முடியும்.

மக்கள் வழங்கும் தகவல்களை குறித்த துறைகளுக்கு உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தாவடிக் கிராமத்தில் தொற்று நீக்கி விசிறல்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணத்தில் கோரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட முதலாவது நபர் வசிக்கும் தாவடிக் கிராமத்தில் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி இன்று காலை முன்னெடுக்கப் பட்டது.

சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து இந்தப் பணியை முன்னெடுத்திருந்தனர்.

கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட புதிய இயந்திரத் தொகுதியால் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி முன்னெடுக்கப்படுகிறது.

இதேவேளை, கோரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர் வசிக்கும் வீடு உள்ள தாவடிக் கிராமத்தில் வசிப்போர் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் கண்காணித்து வருகின்றனர். (ஐ - 07)







## வங்கிகள், காப்புறுதி, திறைசேரி அத்தியாவசிய சேவைகளாகின

இலங்கை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், காப்புறுதி சேவைகள் மற்றும் திறைசேறி என்பவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அத்தியாவசிய சேவையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே, ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியிலும் மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்காக குறைந்த ஊழியர்களுடன் இலங்கை மத்திய வங்கி, அனைத்து வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், அவற்றின் கிளைகள் மற்றும் திறைசேறி என்பவற்றை திறந்து வைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யு.டீ. லக்ஷ்மனுக்கு எழுத்து மூலம் அறிவித்தள்ளார்.

மற்றும் சுகாதாரம், பாதுகாப்பு, பொலிஸ், பொருள்கள் விநியோகம், சுங்க நடவடிக்கை, மின்சாரம், நீர் மற்றும் எரிபொருள் விநியோகம் என்பனவும் ஏனைய அத்தியாவசிய சேவைகளாகும். ஆகவே அவற்றிற்கு எந்த வித தடையுமின்றி செயற்படுத்தக் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோருடன் பிரதான பணிக்குழாம் மற்றும் ஜனாதிபதி அலுவலகம் என்பன தினமும் சேவை நிமித்தம் முழுமையான செயற்பாட்டில் இருக்கின்றன எனவும் கலாநிதி ஜயசுந்தர தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ஏப்ரல் 10 வரை ஆபத்து!

கொழும்பு, மார்ச் 27

ஏப்ரல் 10 ஆம் திகதி வரை கொரோனா வைரஸ் தொற்று ஏற்படக் கூடிய ஆபத்தான காலக்கட்டமாக உள்ளது.

எனவே அதுவரை மேல் மாகாணத்தில் ஊரடங்கு தொடரும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

புத்தளமும் கொரோனா வைரஸ் தொற்று விடயத்தில் அதி ஆபத்து பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் நிலைமை கட்டுக்குள் வரும்வரை பொறுமையாக செயற்பட்டால் ஆபத்தில் இருந்து மீளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# நிரூபிக்கப்பட்ட கொலைக் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டால் நீதிமன்றங்கள் எதற்கு?

## வைத்தியர் சிவமோகன் காட்டமாகக் கேள்வி

பொது மக்களை படுகொலை செய்தவர்களை ஜனாதிபதி விடுதலை செய்ய முடியும் என்றால் நீதிமன்றத்தை மூடுங்கள் என முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

கடந்த யுத்தகாலத்தில் யாழ் மிருசுவில் பகுதியில் எட்டு தமிழர்களை படுகொலை செய்த சுனில் ரத்னாயக்க என்னும் இரனுவ சிப்பாயை பொது மன்னிப்பு அடிப்படையில் ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தது.

இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே வைத்தியர் சிவமோகன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

நேற்றைய தினம் ஊடகங்களில் வந்த செய்திகளின்படி, மிருசுவில் படுகொலை தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ சிப்பாய் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பொது மக்களை படுகொலை செய்தவர்கள் இரா



ணுவத்திரைாக இருந்தாலும் கொலையாளி கொலையாளியே. இராணுவம் என்ற காரணத்தை வைத்துக் கொண்டு பொது மன்னிப்பு வழங்குவதாக இருந்தால் தமிழர்களின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு நிற்பது?

கட்டாயப்படுத்தல்கள் மூலமும், சித்திரவதைகள் மூலமும் ஒப்புதல் வாக்கு மூலங்களைப் பெற்று நீதிமன்றம் ஊடாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக்கப்பட்ட தமிழ் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் இந்த பேரினவாத அரசுகள் என்றும் கரிசனை கொண்டதில்லை.

ஆனால் ஓர் அநீதியைச் செய்து நேரடியாக குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்ட இராணுவ சிப்பாயை ஜனாதிபதி விடுவித்துள்ளார். இதை எவ்வாறு 'ஒரே தேசம்; ஒரே மக்கள்' என்ற கொள்கையில் ஏற்றுக் கொள்வது?

மேலும் பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக இருந்தால் அவர்களை விடுவிப்பதற்கு முன்னர் தீர்ப்பு வழங்கிய நீதித்துறை சட்டத்துறை மற்றும் விசாரணை செய்தவர்களின் சிபாரிசுகள் பெறப்பட வேண்டும். அவை பெறப்பட்டனவா என்னும் விவரங்களும் இதுவரை வெளிவரவில்லை.

எனவே கொரோனா அனர்த்த காலத்தைச் சாட்டாக வைத்துத் தமிழர்களுக்கு எதிரான அநீதிகள் இழைக்கப்படுமாக இருந்தால் அதை எப்படி ஏற்றுக் கொள்வது? இந்த செயற்பாட்டினை வன்மையாக கண்டிக்கிறோம். – என்று சிவமோகன் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## கோடரிக் காம்புகள்

தமிழர்களின் நிலைமையை எண்ணி அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வழி மறிப்பது' என்று நம் மத்தியில் ஒரு பேச்சு வழக்கு உண்டு.

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்திற்காக காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அன்றாடம் உழைப்பாளர்கள், தினசரி கூலியாள்கள், வயோதிபக் குடும்பங்கள், உதவியற்றவர்கள் எனப் பலர் இந்த ஊரடங்குக் கட்டுப்பாட்டினால் அந்தரிக்கின்றனர். அவர்களுக்கு ஏதேனும் செய்தாக வேண்டும் என்ற மனிதாபிமானம் எல்லோரையும் துடிக்க வைக்கின்றது.

'தானாடாவிட்டாலும் தசையாடும்' என்பார்கள். தன் சகோதரன், அயலவன், இனத்தவன், சக மனிதன் ஊரடங்கில் நசுக்கப்பட்டு திணறுகின்றான் என்ற எண்ணம் – உணர்வு – நம்மை பதைபதைக்க வைக்கின்றது.

அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற மன உந்துதலில் இயல்பாக எழும் எத்தனத்தில் இங்கு அரசியல் செய்ய முயல்கின்றது கொழும்பு 'இறக்குமதி' அரசியல் கட்சி ஒன்று.

"வடக்கிலே பாதிப்புற்றோருக்கு உதவியளிக்கிறது கூட்டமைப்பு; உள்ளூராட்சி சபைகளின் நிதியைப் பயன்படுத்தி நிவாரணம் வழங்க ஏற்பாடு என்கின்றார் மாவை" என்ற தலைப்பில் இன்று காலை 'காலைக்கதிர்' இதழின் தலைப்புச் செய்தி வெளியாகியிருந்தது.

சரியோ, பிழையோ கடந்த இரு தசாப்பதங்களாக தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான முதன்மைப் பிரதிநிதிகள் தமிழ்க் கூட்டமைப்புத்தான். நடந்து முடிந்த தேர்தல்களில் எல்லாம் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களினால் சுதந்திராமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிப் பெரும் கட்சி அதுதான். உள்நாட்டில் மட்டுமல்லாமல் சர்வதே ரீதியில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இராஜீக அங்கீகாரம் பெற்ற தரப்பும் அதுதான். கடைசியாக நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களிலும் வடக்கில் அதிக உள்ளூராட்சி அமைப்புகளின் அதிகாரத்தைக் கைப்பற்றி அவற்றை நிர்வகிப்பதும் கூட்டமைப்புத்தான்.

அந்த வகையில் இப்போது அவலப்பட்டு நிற்கும் தம் மக்களுக்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற கட்டாயக் கடப்பாடுடன் முயற்சிக்க வேண்டியது அத்தரப்பின் பொறுப்புத்தான் – அதற்குப் பின்னால் அரசியல் லாபமீட்டும் எந்த நோக்கம் இருந்தாலும் கூட.

எனினும் இந்தப் பணியை முன்னெடுப்பதற்கு உள்ளூராட்சி சபைக்கு அதிகாரம், தத்துவம் உண்டா என்று கேட்டால் சட்ட ரீதியாக முழுமையாக இருக்கின்றது.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டம் இதனைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. 2014 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும், 2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் இதற்குச் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

பிரதேச சபைகளின் தத்துவம் தொடர்பான ஆரம்பப் பிரிவிலேயே (Vii) ஷரத்தில் இது பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"பிரதேச சபை நிதியத்தின் ஏதேனும் பாகத்தை .... மழை வீழ்ச்சி, வெள்ளப் பெருக்கு, புயல் அபாயம், தீ விபத்து, பூமி நடுக்கம், பஞ்சம் அல்லது கொள்ளை நோய் காரணமாக விளைந்த இடுக்கண்ணுக்கு நிவாரணமளிப்பதற்கான அத்தகைய நன்கொடைகளுக்கு அல்லது அத்தகைய வழி வகைகளுக்கு ... ... செலவிடுதல்" என்று உள்ளூராட்சி அமைப்பின் அதிகாரம் சட்டத்தினால் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

பிரதேச சபைகள், மாகாண சபைக்குக் கீழ் இயங்குவதால், இப்போது வடக்கு மாகாண சபை இல்லாத நிலையில் அவை நேரடியாக ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன.

பிரதேச சபைகள் தம்மிடம் இருக்கும் நிதி மூலம் தங்களின் பிரதேசத்தில் உள்ள மக்களின் உடனடி அவலத்தைப் போக்குவதற்குத் தமக்குரிய அதிகாரத்தின் கீழ் செயல்படுவதற்கு ஆளுநர் மூலம் கட்டுப்பாடுகள், மட்டுப்பாடுகளை விதிக்காமல் இருந்தால், இந்தப் பணியை பிரதேச சபைகள் போன்ற உள்ளூராட்சி அமைப்புகள் விரைந்தும், துரிதமாகவும், பாதிக்கப்பட்டோரை நெருங்கிச் சென்றும், பரவலாகவும் முன்னெடுக்க முடியும்.

உண்மையில் கொழும்பில் இருந்து இயங்கும் அரசுக் கட்டமைப்பும் அதன் தலைமைப்பீடமும் அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள தமது அரச அதிகார முகவர்கள் ஊடாக ஆற்றக் கூடிய பணியிலும் விட, சிறப்பான பணியை பாதிக்கப்பட்ட மக்களோடு சேர்ந்து இயங்கும் பிரதேசசபை மூலம் ஆற்ற முடியும்.

கொழும்பு மத்திய அரசே நேரடியாகத் தனது நிவாரண உதவிப் பணிகளை முன்னெடுக்க பிரதேச ரீதியில் பிரதேச சபைகளையே முகவர்களாகப் பயன்படுத்தலாம். அப்படி இல்லாவிட்டால் பிரதேச சபைகள் தமது நிதியைப் பயன்படுத்தித் தாமே அதனை முன்னெடுக்க அனுமதிக்கலாம்.

நிவாரண உதவி ஒரே தரப்புக்கு இரட்டிப்பாகாமல் பார்த்துக் கொண்டால் சரி. அத்தோடு பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு பல தரப்புகளினதும் உதவிகள் சரிசமமாகப் பகிரப்படுவதையும் கவனிக்க வேண்டும்.

இப்படி பிரதேச சபைகள் தமது நிதிமூலம் நிவாரணப் பணிகளை விரைந்து செய்வதற்கு ஒரே முட்டுக்கட்டையாக இருக்கக் கூடியது ஆளுநர் மூலமான மத்திய அரசின் தலையீடுதான். இப்போதைய நெருக்கடி விடயத்தில் அது இருக்குமா என்பது இனித்தான் அம்பலமாகும்.

ஆனால் தெற்கிலிருந்து இங்கு 'இறக்குமதியாகி' அரசியல் செய்யும் ஒரு கட்சி அதன் மூலம் பெற்றுக் கொண்ட தொலைக்காட்சி லைசென்ஸைப் பயன்படுத்தி இவ்விடயத்தில் குளறுபடி பண்ணுகின்றது.

தன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சிச் சபைகள் மூலம் விரைந்து நிவாரணப் பணியை எடுக்கும் கூட்டமைப்பின் முயற்சியை கொச்சைப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு, அப்படி நிவாரணப் பணிகளை செய்வதற்கான அதிகாரமே பிரதேச சபைகளுக்கு இல்லை என்று அடித்துக் கூறிப் பிரசாரம் செய்து, இந்த நிவாரணப் பணியிலும் குறுக்குப் புத்தியுடன் கிறுக்குத்தனமான அரசியல் செய்ய முனைகிறது.

உண்மையில் சட்டரீதியாக அப்படி நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு பிரதேச சபைகளுக்கு சட்ட ரீதியான முழு அதிகாரமும், பொறுப்பும் உள்ளன. மத்திய அரசே அத்தகைய பிரதேச சபைகள் மூலமாக அந்த நிவாரணப் பணியை முன்னெடுப்பதே பொருத்தமானது.

உண்மையில், தெற்கிலிருந்து அரசியல் காவடி தூக்கி வந்து, இங்கு அரசியல் செய்யும் மேற்படி பிரகிருதியின் கொழும்புத் தரப்புகள் அரசியல் உள்நோக்கத்துடன் பிரதேச சபைகளின் இந்த முயற்சியைத் தடுக்காமல் இருந்தாலே போதும். பாதிக்கப்டோருக்கு அவசர – அவசிய – உதவிகள் தாராளமாகக் கிட்டிவிடும்.

குறைந்த பட்சம் மேற்படி பிரதேச சபைகளுக்கு இத்தகைய நிவாரண உதவி வழங்கும் அதிகாரத்தை அத்தரப்பின் கொழும்பு எஜமானார்கள் தடுப்பதை பகிரங்கமாகக் கண்டிக்கும் முதுகுத் தைரியமாவது அவர்களிடம் இருந்தால் நல்லது. அதையாவது செய்வார்களா?

# நீதிக்குச் சவால்; ஸ்ரீநேசன் சீற்றம்

நீண்ட காலமாக சிறையில் வாடும் தமிழ் அரசியற் கைதிகள் விடுவிக்கப்படாமல், அதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத நிலையில் இவ்வாறான படுகொலையாளி பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டிருப்பதென்பது ஜனநாயகத்திற்கும், மனித உரிமைக்கும், சட்டவாட்சிக்கும், நீதிக்கும் விடப்பட்ட சவாலாகவே இருக்கின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இன்றைய தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற படுகொலை சம்பவத்துடன் தொடர்புபட்டவரென நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்கா ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவரையே தற்போது ஜனாதிபதி பொது மன்னிப்பில் விடுதலை செய்துள்ளார். தற்போது நாட்டில் கொரோனா தொடர்பில் மக்களின் பார்வை ஒரு பக்கம் இருக்கின்ற நிலையில் ஜனாதிபதியால் ஒரு படுகொலைக் குற்றவாளி பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டிருக்கின்றார் என்பது இந்த நாட்டில் ஜனநாயகம், நீதி என்பன இருக்கின்றனவா என்கின்ற நிலையை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த அரசாங்கம் கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் நீதி வழங்குமா? பொறுப்புக் கூறுமா? மனித உரிமைகளைப் பேணுமா? – என்கின்ற கேள்விகளும் மக்கள் மத்தியில் எழு கின்றன.

நீண்ட காலமாக சிறையில் வாடும் தமிழ் அரசியற் கைதிகள் விடுவிக்கப்படாமல், அதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத நிலையில் இவ்வாறான படுகொலையாளி பொது மன் னிப்பில் விடுவிக்கப்பட்டிருப்பதென்பது ஜனநாயகத்திற்கும், மனித உரிமைக்கும், சட்டவாட்சிக்கும் நீதிக்கும் விடப்பட்ட சவாலாகவே இருக்கின்றது. – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மனிதாபிமானத்திலும் பாகுபாடு
## பரிதாபத்திலும் பாரபட்சம்





* அந்தச் சிறுமி செய்த புண்ணியம் என்ன?
* இந்தச் சிறுமி இழைத்த பாவம் யாது?

இந்தத் தீவில் –

சிங்களவனுக்கு மகளாகப் பிறந்த புண்ணியம்!

தமிழனுக்கு மகளாகப் பிறந்த பாவம்!

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# கொரோனா வைரஸ்: தந்திர நுண்ணுயிரி!

## உடலின் எதிர்ப்பு சக்தியை ஏமாற்றி வெல்லும் சூழ்ச்சி!

கடந்த டிசம்பர் 2019 இல் தனது நாட்டின் ஊஹான் நகரில் கொரோனா வைரஸ் என்ற புதிய வகை வைரஸ் தாக்கி வருவதாக சீனா வெளியுலகுக்கு முதன் முதலாக தெரிவித்தது.

இந்த வைரஸ் Severe acute respiratory syndrome (SARS - 2) என்ற வகையை சேர்ந்தது. இந்த வைரஸ் உருவாக்கும் நோய்க்குப் பெயர் தான் கோவிட் – 19

### வைரஸ் என்றால்...?

முழுமையான உயிர் பெறாத ஒரு அரைகுறை உயிரி தான் வைரஸ்.

ஒரு ஆர்என்ஏ(நமது செல்களில் ஜீன் எனப்படும் டிஎன்ஏ இருப்பது மாதிரி வைரஸ்களில் இருப்பது டிஎன்ஏவின் அரைகுறை வடிவமான RNA)

அதைச் சுற்றி ஒரு புரதம் (Protein) மற்றும் கொழுப்பு சேர்ந்த ஓர் உறை (ஆல்கஹால் கொண்ட சானிடைசர்கள், சோப்பு நுரை பட்டால் இந்த உறை கரைந்து வைரஸ் அவுட்).

அந்த உறையின் மீது ஆங்காங்கே முள்கள்.

இதுதான் கொரோனா வைரஸ்.

இந்த முள்களின் வேலை எளிதாக எதிலும் ஒட்டிக் கொள்ளவதே.

இந்த முள்களும் புரதத்தால் ஆனவையே.

கொரோனா வைரஸில் இந்த முள்கள் பார்ப்பதற்கு கிரீடத்தில் (Crown) இருக்கும் வேலைப்பாடு போல இருப்பதால் இந்த வைரசுக்கு கொரோனா வைரஸ் எனப் பெயர்.

### இதை ஏன் அரைகுறை உயிரி என்கிறோம்?

இந்த வைரஸினால் தானாக வாழ முடியாது.

இது ஒரு முழுமையான ஒட்டுண்ணி.

ஏதோ ஓர் உயிரினத்தின் செல்லுக்குள் புகுந்து அந்த செல்லில் இருக்கும் திட, திரவப் பொருள்களையே உணவாக்கிக் கொண்டு பல்கிப் பெருகுவது தான் வைரஸ்களின் வேலை.

செல்லுக்கு வெளியே சில மணி நேரமோ அல்லது சில நாள்களோதான் இதனால் தாக்குப் பிடிக்க முடியும்.

இந்த வைரஸ் மூக்கு, வாய் அல்லது கண் வழியாக உள்ளே நுழைந்தவுடன் முதலில் தொண்டைப் பகுதியை தாக்குகிறது.



தொண்டையில் உள்ள திசுக்களின் செல்களில் இது பல்கிப் பெருகியவுடன்தான் தொண்டை வலியும் இருமலும் தொடங்குகிறது.

இந்த வைரஸ்களை எதிர்த்து நம் உடலின் எதிர்ப்பு சக்தி (Immune system) மோதலை தொடங்குகிறது.

அந்த மோதலின் அறிகுறிதான் காய்ச்சல்.

பெரும்பாலான வைரஸ்கள் அதிக வெப்ப நிலையை தாங்க முடியாதவை என்பதால், உடலின் வெப்ப நிலையை உயர்த்தி வைரஸ்களை காலி செய்ய நமது உடலின் எதிர்ப்பு சக்தி முயற்சிக்கிறது.

இந்த மோதலின்போதே பெரும்பாலான வைரஸ்களை நமது உடல் கொன்று விடுகிறது, கொரோனா வைரஸ் உள்பட.

நமது உடலின் Immune system ஒரு மாபெரும் பாதுகாப்பு அரண்.

வைரஸோ, பாக்டீரியாவோ அல்லது வேறு ஒரு நுண்ணுயிரோ உடலுக்குள் புகுந்தவுடன் அவற்றை நமது உடல் இரு வகையான காரணிகளை வைத்து அடையாளம் கண்டுபிடிக்கிறது.

முதலாவது அந்த நுண்ணியிர் வெளியிடும் வேதியியல் பொருள்கள், இரண்டாவது அந்த நுண்ணியிரின் உருவம்.

இது வெளியில் இருந்து வந்த பொருள் என்பதை கண்டுபிடித்த உடனே நமது ரத்தத்தின் வெள்ளை அணுக்கள் அவற்றை கொல்லும் வேலையில் இறங்குகின்றன.

வைரஸ், பாக்டீரியாவை அப்படியே விழுங்கி ஏப்பம் விடும் வேலைக்கு Macrophages, Neutrophils போன்ற அடியாட்களை வெள்ளை அணுக்கள் அனுப்புகின்றன.

ஆனால், இதையும் தாண்டி வைரஸோ பாக்டீரியாவோ உடலை பதம் பார்க்க ஆரம்பித்தால், அடுத்த கட்ட அரண்கள் வேலையில் இறங்கும்.

அதில் ஒன்று Innate lymphoid cells.

இதன் ஒரு பிரிவான T - Killer cellகளின் வேலை வைரஸ்களால் பாதிக்கப்பட்ட உடல் செல்களை கொன்று, வெளியேற்றி உடல் திசுக்கள் மேலும் மோசமடையாமல் தடுப்பது.

மேலும் வைரஸ்களுக்கு உணவாகிக் கொண்டிருக்கும் செல்களின் எண்ணிக்கையை குறைப்பது.

இது தான் இதன் வேலை.

அதே நேரத்தில் Macrophages, Neutrophils போன்றவற்றால் தடுக்க முடியாத வைரஸ்களை ஒழித்துக் கட்ட நமது உடல் அனுப்பும் பிரம்மாஸ்திரம் தான் ய உளயியிவி எனப்படும் வைரஸ்களை தாக்கும் செல்கள்.

இந்த செல்கள் வைரஸ்களின் உருவத்தை அடையாளம் கண்டு, அதன் மீது ஒட்டிக் கொண்டு, அப்படியே இழுத்துச் சென்று Lumph nodes எனப்படும் நிணநீர் சுரப்பிகளில் வைத்து, அங்கு சுரக்கும் இரசாயனங்கள் உதவியோடு வைரஸ்களை கொல்லும்.

இந்த உடல் எதிர்ப்பு சக்தி ஒரு பக்கம் இருக்க...

தொண்டைப்பகுதியை அடைந்த கொரோனா வைரஸ்கள் அடுத்ததாக நமது உடலை பாதிப்பது நுரையீரலை.

## மனித செல்களுக்குள் நடக்கும் உயிர் போராட்டம்!

நுரையீரலின் உள் சுவற்றில் இருப்பவை மிக லேசான பில்லியன் கணக்கான எபிதீலியல் செல்கள்.

இந்த செல்களில் கொரோனா வைரஸ் ஒட்டிக் கொண்டு, துளை போட்டு தனது ஆர்என்ஏவை உள்ளே நுழைக்கும்.

இந்த ஆர்என்ஏ செல்லுக்குள் போய் லட்சக்கணக்கில் தனது பிரதிகளை ஜெராக்ஸ் மெசின் மாதிரி காப்பி எடுக்கும்.

இந்த ஒவ்வொரு ஆர்என்ஏவும் ஒரு வைரசாக மாறும்.

அந்த செல் முழுக்கவே வைரஸ்களால் நிறையும் போது, அந்த செல்லே வெடித்து மடியும்.

அந்த வெடிப்பில் இருந்து கிளம்பும் லட்சக்கணக்கான வைரஸ்கள் அடுத்தடுத்த செல்களை இதே போல தாக்கி அழித்து, பல்கிப் பெருகும்.

10 நாள்களில் நுரையீரலின் பெரும்பாலான செல்களை இந்த வைரஸ் ஆக்கிரமிக்கும்.

இதுவரையும் கூட பிரச்சினை அதிகமில்லை.

> கொரோனா நமது உடல் எதிர்ப்பு சக்தி 'சிஸ்டத்தையே' தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்றுவிடுவதுதான் இந்த வைரஸுக்கு எதிராக எந்த மருந்தை வைத்து போராடுவது என்ற குழப்பத்தில் மருத்துவ உலகை ஆழ்த்தியுள்ளது.

ஆனால், இந்த வைரஸ்களை அழிக்க நமது உடலின் Immune cells எனப்படும் எதிர் தாக்குதல் செல்கள் நுரையீரலில் நுழைந்து தாக்க ஆரம்பிக்கும்போதுதான் பிரச்சினையே தொடங்குகிறது.

மற்ற வைரஸ்களில் இருந்து கொரோனா இங்கேதான் மாறுபடுகிறது.

இந்த கொரோனா வைரஸ், நமது உடலின் எதிர் தாக்குதல் செல்களுக்குள்ளேயே நுழைந்து அதையும் சேதப்படுகின்றன.

சேதப்படுத்துவதோடு மட்டுமல்ல, அந்த செல்களின் ஜீன்களில் குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன.

### அது என்ன வகையான குழப்பம்...?

நமது Immune system செல்கள் ஒன்றோடு ஒன்று தகவல் பரிமாறிக் கொள்வது சைட்டோகைன்ஸ் (Cytokines) எனப்படும் ஒரு வேதிப் பொருள் மூலம்தான்.

ஜீன்கள் பாதிக்கப்பட்ட எதிர் தாக்குதல் செல்கள் குழப்பமான சைட்டோகைன் தகவல்கள் அனுப்ப, நுரையீரலை பாதுகாக்க கிளம்பி வரும் Neutrophils செல்கள், கொரோனா வைரஸ்களுக்கு பதலாக உடலின் எதிர்ப்பு சக்தி செல்களை தாக்க ஆரம்பிக்கும்.

அதே போல பாதிக்கப்பட்ட நுரையீரல் செல்களை தற்கொலை செய்ய வைத்து நோய் மேலும் பரவாமல் தடுக்க வேண்டிய வேலைக்காக வரும் T - Killer cellகள் வந்த வேலையை விட்டு விட்டு, நன்றாக இருக்கும் நுரையீரல் செல்களை அழியச் சொல்லி தகவல் தரும்.

இதனால் நுரையீரல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, அடுத்ததாக பாக்டீரியா தாக்குதல், நிமோனியா உள்ளிட்ட தோற்று நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

# சீனாவை மிஞ்சியது அமெரிக்கா ஒரே நாளில் 15 ஆயிரம் தொற்று



வொஷிங்டன், மார்ச் 27

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வேறு எந்த நாட்டையும்விட அமெரிக்காவில் அதிகரித்துள்ளது. நேற்று ஒரே நாளில் அங்கு 15 ஆயிரத்து 461 பேருக்கு நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் மொத்தம் 83 ஆயிரத்து 672 பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதுவரையில் சீனாவில் 81 ஆயிரத்து 285 பேருக்கு ஏற்பட்ட நோய்த் தொற்று எண்ணிக்கையே உலகளவில் அதிகமானதாக இருந்தது. எனினும் கடந்த 4 நாள்களுக்கும் மேலாகச் சீனாவில் நிலமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதால் அங்கு நாளாந்தம் புதிதாக நோய்த் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை மிக மிகக் குறைந்துள்ளது.

இதற்கு எதிர் மாறாக ஐரோப்பிய நாடுகளில் இந்த நோய்த் தொற்று அசுர வேகத்தில் பரவி வருகின்றது. அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்து இத்தாலியில் 80 ஆயிரத்து 689 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஸ்பெயினில் 57 ஆயிரத்து 786 பேரும் ஜேர்மனியில் 43 ஆயிரத்து 938 பேரும் ஈரானில் 29 ஆயிரத்து 406 பேரும் பிரான்ஜில் 29 ஆயிரத்து 155 பேரும் சுவிற்சர்லாந்தில் 11 ஆயிரத்து 811 பேரும் பிரிட்டனில் 11 ஆயிரத்து 658 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகம் முழுவதும் 199 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலப்பரப்புக்களில் தற்போது கொவிட் - 19 வைரஸ் தொற்றுப் பரவியுள்ளது.

ஏப்ரல் 12ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்திற்கு முன்பாக அமெரிக்கா பழையபடி தனது முழு அளவிலான இயல்புக்குத் திரும்பிவிடவேண்டும் என்கிற அதிபர் ட்ரம்பின் கருத்துக்கு எதிர்த் திசையில் வைரஸ் பரவல் சென்றுகொண்டிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

வைரஸ் தொற்று எண்ணிக்கையில் அமெரிக்கா சீனாவை மிஞ்சிவிட்டமை தொடர்பில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த ட்ரம்ப் அங்கு (சீனாவில்) உண்மையான புள்ளிவிவரம் என்ன என்பது யாருக்குத் தெரியும் என்று கேள்வி எழுப்பினார்.

சீனத் தலைவர் ஜி ஜின்பிங்குடன் வியாழக்கிழமை இரவுதான் தொலைபேசி மூலம் உரையாடினார் என்றும் அவர் தெரிவித்தார். அந்த உரையாடலின்போது அமெரிக்கத் தலைவர் தனது வார்த்தைப் பயன்பாடு தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்று சீனத் தலைவர் எதுவும் தெரிவிக்கவில்லை என்றார் ட்ரம்ப். கொரோனா வைரசை சீன வைரஸ் என்று ட்ரம் விளித்தமை தொடர்பில் சீனத் தலைவர் அவ்வாறு சொன்னார் என்று தகவல்கள் முன்னர் வெளியாகியிருந்தன.

# கொரோன சாவுகள் 24 ஆயிரம்

## தொற்று எண்ணிக்கை ஐந்தரை லட்சத்தை எட்டியது

லண்டன், மார்ச் 27

மனித உயிர்களை உறிஞ்சி இழுத்துவரும் கொரோனா வைரசின் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்தை தாண்டிவிட்டது. இன்று மதியம் வரையில் 24 ஆயிரத்து 117 உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.



5 லட்சத்து 37 ஆயிரம் பேர் நோய்த் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்து 24 ஆயிரம் பேர் மட்டுமே இதுவரையில் குணமாகி மீண்டுள்ளனர்.

நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு மோசமான நிலையில் இருப்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்து 20 ஆயிரத்தை எட்டியுள்ளது.

பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை எல்லா நாடுகளையும்விட அமெரிக்காவில் அதிகமாகியுள்ளது. 85 ஆயிரம் பேர் அங்கு தொற்றுக்குள்ளாகியுள்ளனர். சீனாவில் 81 ஆயிரம் பேரும் இத்தாலியில் 80 ஆயிரம் பேரும் ஸ்பெயினில் 58 ஆயிரம் பேரும் ஜேர்மனியில் 47 ஆயிரம் பேரும் ஈரான் மற்றும் பிரான்ஸில் தலா 29 ஆயிரம் பேரும் சுவிஸ் மற்றும் பிரிட்டனில் 12 ஆயிரம் பேரும் தென்கொரியாவில் 9 ஆயிரம் பேரும் நெதர்லாந்து மற்றும் ஒஸ்ரியாவில் 7 ஆயிரம் பேரும் நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்கள் அமெரிக்காவில் அதிகமாக உள்ளபோதும் அங்கு ஆயிரத்து 301 பேரே இதுவரையில் உயிரிழந்துள்ளனர். இத்தாலியிலேயே அதிகளவு உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. அங்கு 8 ஆயிரத்து 215 பேர் உயிரிழந்திருக்கின்றனர். அதற்கு அடுத்த நிலையில் 4 ஆயிரத்து 365 பேர் ஸ்பெயினில் உயிரிழந்திருக்கின்றனர். சீனாவில் 3 ஆயிரத்து 292 பேரும் ஈரானில் 2 ஆயிரத்து 234 பேரும் பிரான்ஸில் ஆயிரத்து 696 பேரும் உயிரிழந்திருக்கின்றனர்.

ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் பல உயிர்கள் தொடர்ந்தும் காவு கொள்ளப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. உயிரிழந்தவர்களில் அரைவாசிப் பேர் கடந்த ஒரு வாரத்திற்குள் இறந்திருக்கின்றனர். 20 முதல் 26ஆம் திகதிக்கு இடையில் 11 ஆயிரத்து 590 இறப்புகள் நிகழ்ந்தள்ளன. அடுத்த சில தினங்களில் இது கட்டுக்குள் வருவதற்கான எந்த அறிகுறிகளும் தென்படவில்லை.

# கொரோன வைத்தியாசலையை தாக்க முயன்றவர் சுட்டுக்கொலை

## அமெரிக்காவில் சம்பவம்

நியூயோர்க், மார்ச் 27

கொரோனா வைரஸ் நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கப்படும் வைத்தியசாலை மீது குண்டுத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் இளைஞர் ஒருவரை அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் (எவ்.பி.ஐ) சுட்டுக் கொன்றனர்.

மிசோரி மாகாணத்தின் பெல்டன் நகரத்தில் அதிகாரிகளுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 36 வயதான திமோதி ஆர். வில்சன் கொல்லப்பட்டார் என்று அதிகாரிகள் கூறினர்.

கொல்லப்பட்ட இளைஞர் இனவாதத்தாலும் அரச எதிர்ப்புச் சிந்தனைகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தார் என்றும் பல மாதங்களாக அவரைத் தாம் கண்காணித்து வந்தனர் என்றும் எவ்.பி.ஐ. தெரிவித்தது.

கொரோனா வைத்தியசாலையை இலக்கு வைப்பதற்கு முன்பாக, கறுப்பின மாணவர்கள் அதிகம் படிக்கும் பாடசாலை, மசூதி போன்ற வேறு பல இலக்குகளைத் தாக்குவது குறித்து அவர் திட்டமிட்டு வந்தார் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பெல்டனின் கன்சாஸ் நகரத்தில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டதை அடுத்து அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக மக்கள் அனைவரையும் வீடுகளுக்குள்ளேயே இருக்கும்படி சுகாதார அதிகாரிகள் அறிவித்ததைத் தொடர்ந்து கொரோனா நோயாளர்கள் தங்க வைக்கப்படும் வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்த திமோதி முடிவெடுத்தார் என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அவரைக் கைது செய்வதற்கு முயற்சித்த போது நடந்த சண்டையில் அவர் கொல்லப்பட்டார் என்றும்அவர்கள் தெரிவித்தனர்.

# இத்தாலியில் மரணங்கள் 8 ஆயிரத்தைத் தாண்டின

## தெற்கிலும் நோய் தீவிரமடைய ஆரம்பித்திருக்கிறது



வெனிஸ், மார்ச் 27

கொரோனாவின் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இத்தாலியில் 8 ஆயிரத்து 215 ஆக உயர்ந்துள்ளது. அதே நேரம் இதுவரையில் பாதிப்புக் குறைவாக இருந்த தெற்கு இத்தாலியில் தொற்று எண்ணிக்கையும் இறப்பு எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியிருப்பது மேலும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

பல நாள்களுக்குப் பின்னர் இத்தாலியில் புதிதாக நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று சற்றுக் குறைந்திருந்தது. இதனால் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியாத நிலையை தெற்குப் பகுதிகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

ஒப்பீட்டளவில் பின்தங்கியவையான தெற்கு பகுதிகளில் தொற்று மற்றும் இறப்பு எண்ணிக்கை கணிசமான, விரைவான அதிகரிப்பைக் காட்டத் தொடங்கியிருப்பது கவலையை அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் கூறினர்.

ஒட்டுமொத்தமாக 80 ஆயிரத்து 539 பேர் இத்தாலியில் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த இரண்டு வாரங்களாக இத்தாலியில் அனைத்து பொது மக்கள் செயற்பாடுகளும் முழுமையாக முடக்கப்பட்டுள்ளன. எனினும் நோய்ப் பரவல் இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை.

இதுவரையில் தெற்கு இத்தாலியில் நோய்த் தொற்று மிகக் குறைவாகவே இருந்தது. வசதிகள் நிறைந்த வடக்குப் பகுதியுடன் ஒப்பிடுகையில் தெற்கில் மருத்துவ வசதிகள் மற்றும் வாழ்க்கைத் தரம் குறைவானது. எனவே இங்கும் நோய்ப் பரவல் தீவிரமானால் வடக்கைவிட மோசமான விளைவுகள் ஏற்படலாம் என அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

# கொள்கலன்களில் மறைந்து சென்ற 30 பேர் கைதாகினர்

கொள்கலன் பாரவூர்திகளில் மறைந்திருந்து சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்த 30 பேரை மகாராஷ்டிரா பொலிஸார் கைது செய்துள்ளனர். ஊரடங்கு உத்தரவை மீறி அவர்கள் மாநில எல்லையைக் கடக்க முயன்றனர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டினர்.

இந்தியாவில் புதன்கிழமை அதிகாலை முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மக்களின் நடமாட்டம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மாநில எல்லைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால் வேறு மாநிலங்களில் வேலை, கல்வி உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக தங்கியிருந்த மக்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்ப முடியாமல் சிக்கியுள்ளனர்.

வீடுகளினுள் முடங்கியிருப்பது மட்டுமல்ல இருக்கும் இடத்திலேயே இருப்பதும் முக்கியம் என்று பிரதமர் நரேந்திர மோடி மக்களிடம் கேட்டுக் கொண்டிருந்தார். எனினும் மக்கள் இரகசியமாகக் கள்ள வழிகளில் சொந்த இடங்களுக்குத் திரும்ப முயற்சித்து வருகின்றார்கள்.

மருத்துவம், காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை கொண்டு செல்லும் வாகனங்களுக்கு மட்டுமே போக்குவரத்துக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய வாகனங்களில் மறைந்திருந்து அவர்கள் பயணிக்கிறார்கள் என்கின்றனர் பொலிஸார்.

தெலுங்கானா மாநிலத்தில் இருந்து தேசிய நெடுஞ்சாலை வழியாக மகாராஷ்டிரா மாநிலத்திற்குள் நேற்று இரண்டு கொள்கலன் பாரவூர்திகள் நுழைய முயன்றன. மகாராஷ்டிராவின் யவட்மல் பகுதியில் அவற்றைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

சாரதிகள் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்ததால் சந்தேகமடைந்த பொலிஸார் கொள்கலனைத் திறந்து ஆய்வு செய்தனர். உள்ளே 30 பேர் பதுங்கியிருந்தனர்.

அவர்கள் அனைவரும் தெலுங்கானாவில் இருந்து சொந்த ஊரான பஞ்சாப் செல்லவே இந்த பயணம் மேற்கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தியாவில் இதுவரையில் 727 பேருக்குக் கொரோனா

## 16 பேர் உயிரிழந்தனர்



இந்தியாவில் தீவிரமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் இன்று காலை வரையில் 727 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 16 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

குஜராத், தமிழ்நாடு, டெல்லி, கர்நாடகா, இமாசல பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் உயிரிழப்புக்கள் பதிவாகியிருக்கின்றன.

ஸ்ரீநகரின் ஹைதர்போராவை சேர்ந்த 65 வயது முதியவர் உயிரிழந்ததன் மூலம், காஷ்மீரில் முதல் இறப்பு பதிவாகி உள்ளது.

அதிகபட்சமாக மராட்டியத்தில் 125 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கேரளாவிலும் சுமார் 120 பேர் கொரோனாவின் கொடூர கரங்களில் சிக்கி உள்ளனர். குஜராத்தில் நேற்று மேலும் 4 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டதன் மூலம் மொத்த எண்ணிக்கை 43 ஆனது. டெல்லியிலும் இதுவரை 36 பேருக்கு வைரஸ் உறுதி செய்யப்பட்டு இருப்பதாக முதல் - மந்திரி கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

மராட்டியத்தில் கடந்த 24ஆம் திகதி மரணமடைந்த பெண்ணுக்கு கொரோனா பாதிப்பு நேற்று உறுதி செய்யப்பட்டது. அவரின் உறவினர்களை தனிமைப்படுத்துதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தி உள்ளது.

கோவாவில் முதன்முதலாக 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதைத்தொடர்ந்து அவர்களது உறவினர்களை கண்டறியும் பணிகளை முடுக்கி விட்டிருப்பதாக முதல் மந்திரி பிரமோத் சாவந்த் கூறியுள்ளார். மாநிலத்தில் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பதால், மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை தீவிரமாக பின்பற்றுவோம் என சுகாதார மந்திரியும் அறிவித்து உள்ளார்.

நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு உள்ளதால் துயருக்கு உள்ளாகி இருக்கும் தினக்கூலி தொழிலாளர்களுக்கு உதவுவதாக பாலிவுட் இயக்குனர் கரண் ஜோகர், நடிகை டாப்சி ஆகியோர் அறிவித்து உள்ளனர்.

இதற்கிடையே நாடு முழுவதும் 42 பேர் இதுவரை கொரோனாவில் இருந்து குணமடைந்து உள்ளனர். வெப்பம் மற்றும் ஈரப்பதம் நிறைந்த வானிலையால் கொரோனா பரவலின் வேகம் குறைவதாக எம்.ஐ.டி. நிறுவனத்தின் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

## அம்புலன்ஸ் சாரதி லஞ்சம் கேட்டதால்

# சைக்கிளிலேயே வைத்தியசாலைக்கு மனைவியை அழைத்துசென்ற துயரம்

இந்தியாவில் பொதுப் போக்குவரத்து முடக்கப்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலைக்குச் செல்வதற்கு அம்புலனஸ் சாரதி லஞ்சம் கேட்டதால் மனைவியை சைக்கிளிலேயே வைத்து 12 கிலோ மீற்றர்கள் தள்ளி உள்ள வைத்தியசாலைக்கு கணவன் அழைத்து வந்தமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரசை இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் வாகன போக்குவரத்து அடியோடு முடங்கியது. பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே வெளியே வரலாம் என உத்தரவிடப்பட்டுள்ளது. அவசர மருத்துவ உதவிக்கு ஆம்புலன்ஸ் சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம் என அரசு அறிவித்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் பெண் ஒருவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல ஆம்புலன்ஸ் ஊழியர்கள் லஞ்சம் கேட்டதால், அவரது கணவர் வேறு வழியில்லாமல் சைக்கிளில் அழைத்துச் சென்றுள்ளார்.

பாரத் நகர் பகுதியைச் சேர்ந்த தேவ்தத் ராம் என்பவரின் மனைவி கடந்த 20ஆம் திகதி தொழிற்சாலையில் வேலை செய்தபோது ஏற்பட்ட விபத்தில் சிக்கி காலில் அடிபட்டது. பாரத் நகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவரை, மேல் சிகிச்சைக்காக கங்கன்வால் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல தேவ்தத் ராம் முடிவு செய்தார்.

இதற்காக ஆம்புலன்சை அழைத்தபோது, ஆம்புலன்ஸ் டிரைவர்கள் 2000 ரூபாய் லஞ்சம் கேட்டுள்ளனர். இதனால் அதிர்ச்சியடைந்த தேவ்தத், வேறு வழியில்லாமல், மனைவியை சைக்கிளில் வைத்தே 12 கிமீ தொலைவில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

## கொரோனா வைரஸ்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடத்தில்தான் மரணங்கள் நிகழ்கின்றன.

இப்படி உடலின் எதிர்ப்பு சக்தியையே நமது உடலுக்கு எதிராக திருப்பி விடுவதில்தான் கொரோனா வைரஸின் முழு சக்தியும் அடங்கியுள்ளது.

வைரஸின் உருவத்தை வைத்து அடையாளம் காணும் B - cell கள் கூட கொரோனாவிடம் இதுவரை எளிதில் வெற்றியை ஈட்டவில்லை.

இந்த வைரஸ்கள் அனுப்பும் வேதியல் தகவல்கள் (Cytokines) எல்லா நேரமும் ஒரே மாதிரியாக இல்லை.

அவை லட்சக்கணக்கான வகைகளில் மாறிக் கொண்டே இருப்பதால் T - killer cells, B cells ஆகியவற்றால் இவற்றை சரியாக அடையாளம் காண முடியவில்லை.

இது தான் இந்த வைரஸுக்கு எதிராக மருந்தோ தடுப்பு ஊசியோ தயாரிப்பதில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி வருகிபது.

நாம் உண்ணும் அல்லது ஊசி மூலம் போட்டுக் கொள்ளும் மருந்துகள் உடலுக்குள் சென்றவுடன் வேதியியல் தகவல்களாக மாறித் தான் நோயை ஏற்படுத்தும் கிருமிகளோடு நேரடியாக மோதுகின்றன அல்லது உடலின் Immune system உடன் பேசி, வேண்டிய எதிர்ப்பு மருந்தை உடலையே தயாரிக்க வைக்கின்றன.

ஆனால், கொரோனா நமது உடல் எதிர்ப்பு சக்தி 'சிஸ்டத்தையே' தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்றுவிடுவதுதான் இந்த வைரஸுக்கு எதிராக எந்த மருந்தை வைத்து போராடுவது என்ற குழப்பத்தில் மருத்துவ உலகை ஆழ்த்தியுள்ளது.

கொரோனா வைரஸ்களின் கெமிக்கல் தாக்குதல்களால் குழம்பிப்போன T - killer cells, B cells களும் ஏற்கனவே கொரோனா பாதித்த நுரையீரல்களை மேலும் பாதித்து உலகெங்கும் உயிரிழப்புகளை ஏற்படுத்திவருகின்றன.

ஆனால், ஏற்கனவே நுரையீரல் பிரச்சினை, நோய் எதிர்ப்பு சக்தியில் பிரச்சினை உள்ளவர்களில்தான் இந்த உயிரிழப்புகள் அதிகமாக ஏற்படுகிறது.

நல்ல உடல் நிலையில் உள்ளவர்களுக்கு பிரச்சினை குறைவாகவே உள்ளது.

உடலில் கொரோனா வைரஸ் ஏற்படுத்தும் பெரும் குழப்பத்துக்கிடையிலும் பெரும்பாலான நேரங்களில் நமது உடல் எதிர்ப்பு சக்தி சிஸ்டம் கொரோனா வைரஸை தோற்கடித்துவிடுகிறது.

நீரிழிவு நோய் உள்ளவர்களின் ரத்தத்தில் அதிகமாக இருக்கும் சர்க்கரையால் உடலின் எதிர்ப்பு சக்தி முடக்கப்படும் ஆபத்து உள்ளது.

## ஊரடங்கால் அவதியும்

# தெருவோர நாய்களுக்கு உணவூட்டிய சகோதரிகள்



ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், உணவு கிடைக்காமல் தவித்த தெரு நாய்களுக்கு நாக்பூர் சகோதரிகள் உணவு வழங்கியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சமூக விலகல் மற்றும் தனிமைப்படுத்தலை பின்பற்றுவதன்மூலம் கொரோனா வைரஸ் பரவுவதை பெருமளவிற்கு கட்டுப்படுத்த முடியும் என்ற காரணத்தால் இந்தியாமுழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவால் மக்கள் வீடுகளுக்குள் முடங்கி உள்ளனர். சாலைகள் வெறிச்சோடி காணப்படுகின்றன.

இந்த நிலையில் ஊரடங்கு உத்தரவால் உணவின்றி தவிக்கும் தெரு நாய்களுக்கு உணவு வழங்கி கருணை காட்டுகின்றனர் மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த காஜல், திா ஆகிய சகோதரிகள்.

நாக்பூரைச் சேர்ந்த இவர்கள் இருவரும், தங்கள் வீட்டில் சமைத்த உணவுகள் மற்றும் பிஸ்கட் போன்றவற்றை தெருவில் சுற்றித் திரியும் நாய்களுக்கு வழங்குகின்றனர்.

"ஊரடங்கால் அனைத்து உணவங்களும் மூடப்பட்டுள்ளன. ஒரு சில மக்கள் மட்டுமே வீட்டை விட்டு வெளியே வருகின்றனர். இதனால் தெரு நாய்களுக்கு உணவு கிடைக்காத சூழ்நிலை உள்ளது. எனவே, எங்களால் முடிந்த அளவிற்கு இந்த நாய்களுக்கு உணவு வழங்குகிறோம்" என சகோதரிகளில் ஒருவர் தெரிவித்தார்.

ஊரடங்கு உத்தரவு, கொரோனா வைரஸ் அச்சத்திற்கு மத்தியிலும், தெரு நாய்களுக்கு உணவு வழங்கிய சகோதரிகளின் மனிதாபிமான செயலை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# பிரதமர் கூட்டிய கட்சித்தலைவர்கள் கூட்டம் திருப்திகரமானது அல்ல என்கின்றார் ஹக்கீம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நடத்திய கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு திருப்திகரமான பதில்கள் வழங்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த 24ஆம் திகதி (செவ்வாயன்று) அலரிமாளிகையில் பிரதமர் கூட்டிய கட்சித்தலைவர்களின் கூட்டம் தொடர்பில் மு.கா தலைவர் ஹக்கீம் மேலும் கூறியுள்ளவை வருமாறு: –

இந்த ஒன்றுகூடல் ஏமாற்றத்தை அளித்தது. எதிர்பார்த்தவாறே கொவிட் –19 கொரோனா வைரஸ் பரவுவதை வெற்றிகரமாக கட்டுப்படுத்தி வருவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜயசிங்க, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர.டி.சில்வா மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன ஆகியோர் சுய பிரதாபங்களை வெளியிட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது.

நிலைமை சிறப்பாக கையாளப்பட்டதா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. சில தீர்மானங்களைப் பொறுத்தவரை அவை அரசாங்கத்தின் ஆரம்ப வினைத்திறனில் இருந்த குறைபாடுகளையும், தாமதித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் நியாயப்படுத்துவனவாகவே அமைந்திருந்தன.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவு கட்டில்களின் எண்ணிக்கையை தற்போதைய தொகையான 600 இலிருந்து அரசாங்க வைத்தியசாலைகளில் மேலும் 100 கட்டில்களால் அதிகரிக்க உள்ளதாக சம்பந்தப்பட்ட அமைச்சர் கூறினார்.

அவை இரட்டிப்பாக அதிகரிக்கப்பட வேண்டியதன்



அவசியத்தை நாங்கள் வலியுறுத்தினோம். சந்தேகத்துக்குரிய நோயாளர்களிடம் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளை அரசாங்க மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் மட்டுமல்லாது, மேலதிகமாக மூன்று மருத்துவ பீடங்களில் காணப்படும் வசதிவாய்ப்புக்களையும் அவற்றுக்காக பயன்படுத்துவது பற்றியும் அங்கு எடுத்துக்காட்டப்பட்டது.

அன்றாடம் கூலித்தொழில் செய்து வாழ்வோரின் அவல நிலை பற்றி சுட்டிக்காட்டி ஊரடங்குச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்திற்கான மாற்று ஏற்பாடுகளின் தேவை வலியுறுத்தப்பட்டது.

நான் கருத்துத்தெரிவிக்கின்ற சந்தர்ப்பத்தில், இந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அவசரமானவேளையில் நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்படுகின்றோம், என்பதை எடுத்துக்காட்டும் வகையில் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி நிவாரண உதவிகள், சட்டவாக்கம் உட்பட முக்கிய முடிவுகளை மேற்கொள்ள வழிவகுக்க வேண்டியுள்ளமையை வலியுறுத்தியபோது, சுமந்திரனும் அதனோடு உடன்பட்டார். ஆனால் உதய கம்மன்பிலவும், விமல் வீரவன்ஸவும் அவர்களது கைங்கரியத்தில் நாங்கள் பங்கேற்க தேவையில்லை என ஆக்ரோமாக எதிர்த்தனர்.

நாடு சர்வாதிகார போக்கை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கத்தக்கதாக, விளைவுகள் மோசமாகுமானால் வீறாப்புப் பேசும் இந்த இருவரும் அதற்கான பொறுப்பை ஏற்பார்களா?

இதேவேளையில், நாடாளுமன்ற தேர்தலை கால வரையரையின்றி பின்போடுவதாக தெரிவிக்கும் தேர்தல் ஆணையாளரின் அறிவித்தல் சட்டவலுவற்றது.

புதிய பாராளுமன்றம் மே மாதம் 14 ஆம் திகதி கூடவுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள வர்தமானி அறிவித்தலும் இன்னும் இருந்து வருகின்றது.

இவ்வாறிருக்க, இன்றுள்ள இக்கட்டான, ஆபத்தான சூழ்நிலையில் தேர்தலைப் பற்றிச் சிந்திக்க கூடிய மனநிலையில் மக்கள் இல்லை. அரசமைப்புக்கு புறம்பான சில நடவடிக்கைகள் ஜனநாயகத்தை கேள்விக்குரியதாக ஆக்கலாம். – என்றார்.

## அஞ்சல் அலுவலகங்களை தினமும் இரண்டு மணிநேரம் திறக்க ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 28

நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள வேளையில் தினமும் குறைந்தது இரண்டு மணிநேரம் அஞ்சல் அலுவலகங்களைத் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தபால் மா அதிபர் அறிவித்துள்ளார்.

தபால் ஊழியர்கள், பிரதேசத்தின் நோயாளர்களுக்கு அரச வைத்தியசாலைகளில் வழங்கப்படும் மருந்துகளைப் பெற்றுச் சென்று வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீரிழிவு, குருதி அழுத்தம் உள்ளிட்ட நோய்களுக்கு அரச வைத்தியசாலைகளில் மாதந்த கிளினிக்குச் செல்லும் நோயாளர்களுக்கு இரண்டு மாதத்துக்கு தேவையான மருந்துகளை வழங்க அரசு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 4,018 பேர் கைது

*கொழும்பு, மார்ச் 27*

*கொரோனா வைரஸ் பரவிச் செல்வதைத் தடுப்பதற்காக, இந்த மாதம் 26ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 4,018 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 1033 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதென பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*இதேவேளை இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்துக்குள் மாத்திரம் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 533 பேரும் 98 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*






# சமுர்த்தி வங்கிக்கு முன் திரண்ட மக்கள் கூட்டம்

## முல்லை அரச அதிபரின் உத்தரவை மீறினரா சமுர்த்தி அதிகாரிகள்?







முல்லைத்தீவு, மார்ச் 27

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக அரசாங்கத்தின் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை உள்ளிட்ட நடவடிக்கைகளில் விசேடமாக அதிகாரிகள் அவற்றை வீடு வீடாக சென்று மக்களிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன் அண்மையில் தெரிவித்திருந்தார்

இந்நிலையில் அரச அதிபரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்ட போதும் சில அதிகாரிகள் அரச அதிபரின் கருத்தை அவமதித்து மக்களின் பாதிப்புக்களையும் கருதாது சமுர்த்தி வங்கிகளுக்கு பயனாளிகளை அழைத்துக் கொடுப்பனவுகளை வழங்குகின்றனர். இதனால் சில சமுர்த்தி வங்கிகளில் அதிக அளவில் மக்கள் ஒன்று கூடுவதால் நோய்த் தொற்றுகள் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு சில சமுர்த்தி வங்கி அதிகாரிகள் கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்குக் கொடுப்பனவுகளை வழங்குகின்றார்கள். சில வங்கிகளில் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதால் வங்கிகளுக்கு முன்னால் மக்கள் அதிகளவில் ஒன்று கூடும் நிலைமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இது குறித்து தொடர்பில் மாவட்ட அரச அதிபருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர் உடனடியாக மக்களை வீடுகளுக்கு அனுப்பி வீடுகளுக்குச் சென்று கொடுப்பனவு வழங்குவதற்கு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# மிருசுவில் கொலையாளிக்கு மன்னிப்பு; சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

கொழும்பு, மார்ச் 27

மிருசுவில் படுகொலையில் பொதுமக்களை வெட்டியும், சுட்டும் கொன்ற கொடூர கொலையாளிக்கு ஜனாதிபதி கோட்டாபய பொது மன்னிப்பளித்தது பல தரப்பிலும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலகளவிலும் இந்த நடவடிக்கை கண்டிக்கப்பட்டு வருகிறது.

சர்வதேச மன்னிப்புச்சபையும் இந்தப் பொது மன்னிப்பை கண்டித்துள்ளது. அந்த அமைப்பின் தெற்காசியாவுக்கான பிராந்திய இயக்குநர் பிராஜ் பட்நாயக் இது குறித்து குறிப்பிட்டபோது,

இலங்கையில் கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் மிகவும் அரிதானது. சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்காவை விடுவிப்பதற்கான அரசின் தன்னிச்சையான முடிவு மிகவும் கவலையான செய்தியை அனுப்புகிறது. இதன் பொருள் என்னவென்றால், இராணுவக் குற்றவாளிகளின் கொடூரமான குற்றங்கள், நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டாலும், மன்னிக்கப்பட்டு விடுவிக்கப்படுவார்கள் என்பதே எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு தொற்றுநோய் சூழலைப் பயன்படுத்தி கொடூரமான குற்றவாளிகள் மன்னிப்பளிக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிக்கான உரிமை உண்டு, நீதி வழங்கப்படுவதை உறுதி செய்ய கடமை இலங்கைக்கு உள்ளது என்றார் அவர்.

# கர்ப்பிணித் தாய்மாரின் அவசர சுகாதார உதவிகளுக்குத் தொலைபேசி இலக்கம்

கொழும்பு, மார்ச் 28

நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் கர்ப்பிணித் தாய்மார்களது நலன்கருதி மகப்பேற்று மருத்துவர்களால் சிறப்புத் தொலைபேசி இலக்கம் ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்களது சுகாதார பிரச்சினைகள் தொடர்பில் அறிவிப்பதற்கு இந்த தொலைபேசி இலக்கம் 24 மணிநேரம் சேவையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொலைபேசி இலக்கம் - 0710301225**

# கரவெட்டி பிரதேசத்தில் இன்று நடமாடும் மரக்கறி வியாபாரம்





வடமராட்சி, மார்ச் 27

வடமராட்சி பிரதேசத்தில் நடமாடும் மரக்கறி விற்பனை இன்று ஆரம்பித்துள்ளது.

நெல்லியடி மற்றும் உடுப்பிட்டி, வதிரி போன்ற இடங்களில் மரக்கறி வியாபாரிகள் சுமார் 70 பேருக்கு தத்தமது கிராமங்களில் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கிராமம் தோறும் மரக்கறி வியா பாரம் பரவலாகப்பட்டு உள்ளது. சில விற் பனையாளர்கள் தமது சொந்தத் தோட் டங்களில் மரக்கறிகளை விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள் . (ஐ)



காலைக்கதிர் Kalaikkathir

வீட்டுத்தோட்டம்



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளை (28/03/2020) தலைப்பு
வீட்டுத்தோட்டம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மருந்தகங்கள், ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் இவற்றை மூடும் செயற்பாட்டில் இறங்கினர்.

நாட்டில் ஊடரங்கு வேளையில் மருந்தகங்களைத் திறக்க அனுமதியளித்திருந்த நிலையில் பதில் பொலிஸ் மா அதிபர் இந்த அறிவுறுத்தலை இன்று வழங்கினார்.

மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வீடுகளுக்கே கொண்டுசென்று விநியோகிக்கப்படவுள்ளதால் மருந்தகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடி களை மறு அறிவித்தல்வரை மூடுவதற்கு பதில்பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தால் விடுக்கப்பட்ட அறிக்கையில் –

கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் நோக்கில் தற்போது நாடளாவிய ரீதியில் ஊரடங்குச்சட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்களின் நலன்கருதி அனைத்து மருந்தகங்களையும் திறந்து வைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியிருந்தது.

மக்களின்நலன் தொடர்பில் அரசும் எடுத்துள்ள இந்த முடிவை கருத்திற்கொள் ளாத சிலர் இந்த மருந்தகங்களில் ஏனைய பொருள்களையும் விற்பனை செய்து வருவதாகத் தகவல் கிடைத்துள்ளதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது – என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

## புதன்கிழமை முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் வகையில் எதிர்வரும் சில தினங்களில் மருத்துவக் குழு ஒன்று கண்டிக்கு அனுப்பப்படவுள்ளதாகவும், அதன் பின்னர் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் வைத்து முதற்கட்டமாகப் பரிசோதனை நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதாகவும், தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலையிலும் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்

யாழ்ப்பாணத்தில் கொரோனோ தொற்று தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனொ தொற்று சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 33 நபர்களுக்கு மேற் கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளில் அவர்களுக்கு தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவர்களை இருப்பிடங்களுக்குத் தற்போது அனுப்பிவைத்திருக்கின்றோம்.

ஆயினும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் மாத்திரம் கொரோனோ தொற்றுக்குள்ளாகிய நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டார்.

இதேவேளை, சந்தேகத்தின் அடிப்படையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றவர்களுக்கு விசேட பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய தீவுப் பகுதிகளில் ஒன்றான அனலைதீவில் இருந்து ஒருவர் கொண்டு வரப்படுகின்றார். அவருக்குப் பரிசோதனைகள் செய்து சிகிச்சையளிப்பதற்கு வைத்தியர்குழாம்தயாராகஉள்ளது. அதற்கானஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இன்றைய தினமே பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மாதிரிகள் எடுக்கப்பட்டு அநுராதபுரம் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

இந்தப் பரிசோதனைகளை அடுத்த கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. யாழ். பல்கலைக்கழக மருத் துவ பீடத்தில் இருக்கும் பீ.சீ.ஆர். இயந்திரத்தை இயக்குதவற்கு ஆயத்தங்கள் மேற் கொள்ளப்பட்டு உள்ளன. இதற்கமைய எதிர்வரும் புதன்கிழமைமுதல்இந்தப்பரிசோதனைகளை இங்கு செய்ய முடியும். அதனைத் தொடர்ந்து இதே பரிசோத னைகளை யாழ். போதனா வைத்திய சாலையில் வைத்துத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பரிசோதனைகளைச் செய்வதற்கான மருத்துவக் குழுவினர் சில தினங்களில்கண்டிக்குச்சென்று இந்தப்பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளனர். அதனைத்தொடர்ந்து இந்தக் குழுவினர் இங்கு வந்து பரிசோதனைகளை மேற்கொள்ள இருக்கின் றனர்.

ஆகவே இவ்வளவுநாளும் அநுராதபுரம் அனுப்பி மேற்கொள்ளப்பட்டு வந்த பரிசோதனைகளை இனிமேல் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனடிப்படையில் எதிர்வரும் புதன்கிழமை முதல் இந்தப் பரிசோதனைகளை இங்கு மேற்கொள்ள முடியுமென நம்புகிறோம். கொரோனோ தொற்று சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 4 வயதுச் சிறுமி ஒருவருக்கு நேற்று இரவு செய்யப்பட்ட பரிசோதனை முடிவுகளின்படி நோய்த் தொற்று இல்லை என உறுதிப்படுத்தி அவரை தற்போது அவரது வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம்.

ஆனாலும் இந்தத் தொற்றுக்கான அபாயம் இந்தப் பகுதியில் நீங்கிவிடவில்லை. ஆகவே பொது மக்கள் அரசினதும் சுகாதார அமைச்சினதும் அரச அதிகாரிகளினதும் ஆலோசனைப்படி மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும்.

நோய்த்தாக்கத்தின் அபாயம் நீங்கவில்லை. ஆகவே இந்த நோய் தொற்றிக் கொண்டால் பல உயிரிழப்புக்களை ஏற்படுத்தக் கூடிய ஆபத்து ஏற்படலாம். எனவே பொது மக் கள் மிக மிக அவதானமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம் –என்றார். (ஐ –07)

## திறைசேரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு , சுகாதார சேவை உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் தேவையான நிதியை வழங்குவதற்குத் திறைசேரி தயாராகவுள்ளது என அவர் கூறியுள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களை மக்களுக்களின் வீடுகளுக்குச்சென்று விநியோகிப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

## இதுதான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாக்கும். ஆனால் இலங்கையில் எண்மரைப்படுகொலைசெய்த மரணதண்டனைக் கைதிக்கு ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்படுகிறது. இதுவே இலங்கையின் நிலை என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர கடுமையா கச் சாடியிருக்கிறார்.

யாழ்ப்பாணம், மிருசுவில் படுகொலை விவகாரத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தின் விசேட படைப் பிரிவின் ஸ்ராவ் சார் ஜண்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். இது குறித்து மங்கள சமரவீர அவரது டுவிட்டர் பக்கத்தில் இன்று வெள் ளிக்கிழமை பின்வருமாறு பதிவிட்டிருக்கிறார்:

'உலகின் ஏனைய நாடுகள் இராணுவத்திற்கு அவமதிப்பையும், இழிவையும் ஏற்படுத்திய குற்றவாளிகளைத் தண்டிப்பதன் ஊடாக தமது இராணுவத்தினரின் நன் மதிப்பைப் பாதுகாக்கின்றன. ஆனால் இப் போது ஒரு சிறுவனையும் இன்னும் எழுவ ரையும் படுகொலை செய்தமைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிக்கு ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்படுகிறது".

## இலங்கைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி நிற்கிறது என வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இல்லை என்பதை ஜனாதிபதி நிரூபிக்கவேண்டும் என்றால் சிறைச் சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் கட்டம் கட்டமாக பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மிருசுவில் பகுதியில் எட்டுப் பேரைப் படுகொலை செய்த பிரதான குற்றவாளிக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. இந்தக் குற்றவா ளிக்கு ஜனாதிபதி கோட்டாபய பொதுமன் னிப்பளித்து விடுதலை செய்துள்ளார்.

இதேபோல், திருகோணமலையில் குமாரபுரத்தில் 26 பேர் படுகொலை செய்யப் பட்டதற்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது. அதுமட்டு மன்றி திருகோணமலையில் இடம்பெற்ற வழக்கை அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றி நீதி மறுக்கப்பட்டது. அத்தகைய கொலைகளைச் செய்தவர்களை ஜனாதிபதியும் இலங்கை அரசும் பொதுமன்னிப் பளித்து விடுதலை செய்து வருகின்றனர்.

இத்தகைய சம்பவங்களைச் செய்து வரும் ஜனாதிபதியும் இந்த அரசும் தமிழ் மக்களைப் படுகொலை செய்தது சரி என்பதை நிலைநாட்டி வருகின்றமையால் இலங்கைக்குள் இனிமேல் நீதியை எதிர்பார்ப்பது பயனில்லை என்பதை எங்களுக்கு நூறு வீதம் புரியவைத்துள்ளார்கள். தமிழ் மக்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளார்கள். இந்தச் சூழ்நிலையின் பின்னணியில்தான் நாங்கள் அடுத்தக் கட்ட நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்.

இதேவேளை, ஜனாதிபதி சிங்கள,பௌத்த பேரினவாத ஜனாதிபதியில்லை என்பதை நிரூபிப்பாராக இருந்தால் ஆகக் குறைந்தது 15 வருடங்களுக்கு மேலே தண்டனை வழங்கப்பட்டவர்கள் அல்லது தடுத்து வைக்கப்பட்டவர்களை (அரசியல் கைதிகள்) முதற்கட்டமாகவும், பத்து வருடங்களுக்கு மேலே சிறைச்சாலையில் இருப்பவர்களை இரண்டாவது கட்டமாகவும், ஏனையவர்களை மூன்றாவது கட்டமாகவும் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்யாதுவிடின் நாங்கள் இலங்கை என்ற ஓர் ஆட்சி அதிகாரத்திற்குக் கீழே–நாட்டுக்குகீழே–ஓர் அரசியல்தீர்வையோ அல்லது வேறு எதையும் எதிர்பார்ப்பது முட்டாள்தனம் – என்றார். (ஐ)

## பொதுமக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் அதனை மீறிய குற்றச்சாட்டில் 4 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது மருந்தகங்களைத் திறக்க அரசு அனுமதித்த நிலையில் பொதுமக்களின் நடமாட்டம் வீதிகளில் அதிகமாகக் காணப்பட்டதால் அவற்றை உடனடியாக மூடுமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பதில் பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளார். இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்த அடுத்து இரண்டு வாரங்களும் மிகவும் முக்கியமானது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.(ஐ)

## ஊரடங்கைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையாக மாறியிருக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுப்பதற்காகவே ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:–

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப் பகுதியில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களை வீட்டிலி ருந்தே கொள்வனவு செய்யக்கூடிய வகை யில் தடையின்றி வழங்கலை மேற்கொள்ள வும், அத்தியாவசியப் பொருள்களை விநி யோகிப்பதை முகாமைத்துவம் செய்வதற்கு பொறுப்பான செயலணி அனைத்து ஏற் பாடுகளையும் செய்துள்ளது. ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் தனது விருப்பத்துக்கு அமைய எவரும் வீதிகளுக்கு வரக்கூடாது. செயலணியினால் அனுமதியளிக்கப்பட் டுள்ள வழங்கல் வாகனங்கள் மட்டும் வீதிகளில் பயணம் செய்ய முடியும். வேறு எந்த ஒரு வாகனமும் ஊரடங்குச் சட்ட அனும திப்பத்திரமின்றிப் பயணம் செய்ய முடியாது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கிடையேயும் பயணம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளை ஆங்காங்கே அழைத்துச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. எந்த மாவட்டத்திலும் விவசாய நடவடிக் கைகள், சிறுதேயிலை தோட்டங்கள் உள்ளிட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகள் மற்றும் மீன்பிடித் தொழிலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விமான நிலைய மற் றும் துறைமுக சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## எரிமலை மீதே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிதறும் என எவரும் எதிர்பார்க்க முடி யாத நிலைமையே உள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த இரண்டு நாள்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்தாலும் கூட கொரோனாத் தொற்று தொடர்பான அச்சுறுத்தல் தொடர்ந்தும் நிலவுவதாகவும் அடுத்த இரண்டு வாரங்க ளில் மிகக்கடுமையான சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளாகவும் சுகாதார சேவைகள்பணிப்பாளர் அனில்ஜாசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நிலைமைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக் கையில் –

கடந்த இரண்டு வாரங்களுக்கு அதிகமான காலமாக நாம் மிகவும் கவனமாக கொரோனா தொற்றுப்பரவல் குறித்து அவதானம் செலுத்தி வருகின்றோம்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் வரையில் இலங்கையில் அதிகளவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட போதிலும் கடந்த இரண்டு, மூன்று தினங்களாகத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதனால் கொரோனா வைரஸ் நோய் பரவல் குறைந்துள்ளதாகவோ அல்லது முற்றாக தடுக்கப்பட்டுள்ளதாகவோ ஒருபோதும் கருத முடியாது.

இப்போது எவரும் அடையாளம் காணப்படாத போதிலும் கூட எரிமைலை ஒன்றின் மீது பயணிப்பது போன்றே இப்போதைய சூழ்நிலை அமைந்துள்ளது. எப்போது வெடித்துச் சிதறும் என எவரும் எதிர்பார்க்க முடியாத நிலைமையே உள்ளது.

எனவே மக்கள் மிகவும் அவதானமாக தம்மைப்பாதுகாத்துக்கொள்ளும் நடவடிக்கைகளைக் கையாளவேண்டும். சுகாதாரத்துறை வழங்கும் ஆலோசனைகளை முழுமையாகப் பின்பற்றிச் செயற்பட வேண்டும். ஒரு சிலர் தூரநோக்கு சிந்தனையின்றிச் செயற்படுவது ஒட்டுமொத்த நாட்டையும் பாதிக்கும். ஒவ்வொருநபரும் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

உலக நாடுகளில் இன்று இரண்டாம் கட்டமாக மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. அவ்வாறு இருக்கையில் இலங்கையிலும் நாம் முன் கூட்டிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் எமக்கு உள்ளது.

ஆகவே சுகாதாரத் துறையினர் அடுத்த இரண்டு வாரங்களில் மிகவும் கடினமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவேண்டியுள்ளது. அரசு எமக்கான முழுமையான அதிகாரங்களை வழங்கியுள்ளது –என்றார்.

## கிளினிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:+

வடக்கு மாகாணாத்தில் எந்தவொரு அரசவைத்தியசாலையிலாவது அல்லது அரச நடமாடும் கிளினிக் நிலையங்களிலாவது பதிவு செய்து மாதாந்தம் மருந்து பெற்று வருபவர்கள் உடனடியாக தமது கிளினிக் நடைபெறுகின்ற வைத்தியசாலைகளுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

வைத்தியசாலையின் தொலைபேசி இலக்கங்கள் தெரியாவிடின் உங்களது மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உங்களது வைத்தியசாலையின் தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளின் தொலைபேசி இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் – 021 221 7278
வவுனியா – 024 222 2893
கிளிநொச்சி – 021 228 5933
மன்னார் – 023 222 2916
முல்லைத்தீவு – 021 229 0102

வைத்தியசாலையைத் தொடர்புகொண்டு நீங்கள் உங்களது பின்வரும் தகவல்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

முழுப் பெயர், வயது, பால், சிகிச்சை பெறும் வைத்தியசாலை,சிகிச்சை பெறும் கிளினிக்

கிளினிக் இலக்கம் (உங்கள் கிளினிக் கொப்பியில் எழுதப்பட்டிருக்கும்),உங்களது தபால் முகவரி, உங்களைத் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம்,

இந்தத் தகவல்களை நீங்கள் கொடுத்தால் உங்களது மருந்துகள் உங்களைத் தேடி உங்களது வீட்டுக்கு வரும்என்றுள்ளது. (ஐ)

## 4 வயதுப் பாலகிக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வுகூடப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் எதிர்மறையான அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தாவடியைச் சேர்ந்த 4 வயது பாலகி யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுச் சேர்க்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்ட முதலாவது கொரோனா தொற்றுள்ள நபரின் சகோதரியின் மகளே இவ்வாறு காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் காணப்பட்டதால் அவரது குருதி மாதிரி ஆய்வுகூடப் பரிசோதனைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அந்த ஆய்வுகூடப் பரிசோதனையில் பாலகிக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் பாலகி வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், தற்போது வைத்தியசாலையின் கண்காணிப்பில் யாரும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிரிட்டன் பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை மருத்துவ அதிகாரி கிறிஸ் விட்டி அறிவுறுத்தியதன் பேரில், கிருமிப் பரிசோதனை மேற்கொண்டார் எனவும், இதன்போது கொரோனா தொற்றுக்கு இலக்கானமை தெரிய வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

55 வயதான பொரிஸ் ஜோன்சன், கொரோனாவுக்கான இலேசான அறிகுறிகளைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் தொற்றுக்கு இலக்கானதையடுத்து மற்ற மூத்த அமைச்சர்கள், பேராசிரியர் விட்டி போன்ற மூத்த நபர்கள் மற்றும் ஜோன்சனின் கர்ப்பிணி மனைவி கேரி சைமண்ட்ஸ் ஆகியோரும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

பொரிஸ் ஜோன்சன் இன்று வெளியிட்ட வீடியோவில் தனக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டதை அறிவித்தார்.

நான் வீட்டிலிருந்து வேலை செய்கிறேன், நான் என்னைச் சுயமாக தனிமைப்படுத்துகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா தடுப்பு நடவடிக்கையில் மதத் தலைவர்கள் தலையிடக்கூடாது

## மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

கொரோனா தடுப்பு நடவடிக்கையில் மதத் தலைவர்கள் தலையிடக்கூடாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தனது முகப்புத்தகம் ஊடாக அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

'கொரோனா தடுப்பு/நிவாரண நடவடிக்கையில் மருத்துவ விஞ்ஞானத்துக்குப் புறம்பாக மதத் தலைவர்கள் தலையிடக்கூடாது. இது எல்லா மதங்களுக்கும் பொருந்தும். மருத்துவர்களைப் படைப்பதும் இறைவன்தானே? ஆகவே மருத்துவர் மூலமாக இறைவன் சொல்வதைக் கேட்டு நடந்துக்கொள்ளுங்கள்.

மதத் தலைவர்கள், இதில் இந்நேரம் நேரடியாகத் தலையிட்டால், அப்புறம் கொரொனா அவர்களையும் பீடிக்க, அவர்களும் மருத்துவரிடம் போக வேண்டி வரும். இதுதான் ஆண்டவனின் டிசைன். என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# 41 முதல் 50 வயதுக்கு உட்பட்ரோரே கொரோனாவால் அதிகம் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 27

இலங்கையில் இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா நோயாளிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் 41 முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்கள் எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை நாட்டில் 106 உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகள் அடையாளம்காணப்பட்டுள்ளனர் எனவும் அதில் 7 பேர் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர் எனவும் சுகாதார மேம்பட்டுப்பணியகத்தின் அண்மைய அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

தற்போது பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுள் 11 வயதிற்குட்பட்ட ஐந்து பேரும் 11 முதல் 20 வயதுக்குட்பட்ட 05 பேரும் 21 முதல் 40 வயதுக்குட்பட்டவர்கள் 36 பேரும் உள்ளடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில் 5.1 விகிதமானவர்கள் 51 முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும், 61 முதல் 70 வயதுக்குட்பட்ட ஏழு நபர்கள் வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் 71 வயதிற்கு மேற்பட்ட இரண்டு நபர்களும் கிருமி தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மேலும், இலங்கையில் மொத்த கொரோனா கிருமி தொற்று நோயாளிகளில் 68 விகிதமானவர்கள் ஆண்கள் என்றும் அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் கொழும்பில் 25 பேரும் களுத்துறையில் 15 பேரும் கம்பாஹா மாவட்டத்தைச் சேர்ந்த 10 பேரும் புத்தளம் மாவட்டத்தில் ஒன்பது பேரும் அடங்குவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முல்லைத்தீவில் நேற்றுக் காலை அதிகளவில் ஒன்றுகூடிய மக்கள்

முல்லைத்தீவு, மார்ச் 27

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று காலை தளத்தப்பட்ட நிலையில் அதிகளவான மக்கள் நகர்ப் புறங்களில் ஒன்று கூடினர்.

ஜனாதிபதியால் பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தாலும் அவை மக்களைச் சென்று அடைந்துவிட்டனவா என்ற கேள்விகளுக்கு மத்தியில் அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களை வாங்குவதற்காக மக்கள் அதிகளவில் முண்டியடித்தனர்.

குறிப்பாக வங்கிகளில் பணத்தைப் பெறுவதற்காக மிக நீண்ட வரிசைகளில் மக்கள் நின்றதோடு அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக பல்பொருள் வாணிப நிலையங்களில் மிக நீண்ட வரிசையில் மக்கள் நிற்பதை அவதானிக்க முடிந்தது.







# புத்தளம் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா கட்டடத்தில் கொரோனா சிகிச்சை

கொழும்பு, மார்ச் 27

புத்தளம் இரணவில பகுதியில் உள்ள வொய்ஸ் ஒவ் அமெரிக்கா நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் கொரோனா சிகிச்சை மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

400 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள வொய்ஸ் ஒவ் அமெரிக்கா பரிமாற்ற நிலையம் தற்போது இயங்காமல் உள்ளது. இங்கு உள்ள கட்டடங்களில் சிகிச்சை மையம் அமைக்கலாமென ஆலோசிக்கப்பட்டதையடுத்து, இராணுவத்தளபதி, சுகாதார அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று ஆய்வு நடத்தினர்.

அந்த இடத்தில் 50 கெரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான கட்டுமான வேலைகளில் இராணுவப் பொறியியல் பிரிவு ஈடுபட்டுள்ளது. (ஐ)



# வட்டுக்கோட்டையில் 230 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் விநியோகிப்பு





யாழ்ப்பாணம், மார்ச்

வட்டுக்கோட்டையில்வறுமைக்கோட்டுக்கு உள்பட்ட 230 குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொருள்கள் பொதி தன்னார்வத் தொண்டர்களால் வழங்கப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 1992ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் 190 குடும்பங்களுக்கும் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மகேஸ்வரன் என்பவரின் நிதிப் பங்களிப்பில் 40 குடும்பங்களுக்கும் இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொடர்ச்சியாக நடைமுறையில் இருக்கும் ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக வாழ்வாதாரத்தையிழந்துள்ள குடும்பங்களுக்கு இவ்வாறு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

சமூக சேவையாளர் தபோதரன் விஸ்வநாதனின் ஏற்பாட்டில் இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன. அவரது நிதிப் பங்களிப்பில் கடந்த சில தினங்களுக்கு முன்பு 90 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ -07)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2020 இல் வெளியிடப்பெற்றது.